**தலைப்பு 203- கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 203- கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செலவின விடயம் 5-1058 ஆன சமய மற்றும் அறநெறி பாடசாலை நடவடிக்கைகள் இன் கீழ் ஆரம்ப மதிப்பீட்டில் ரூபா 8,000,000 ஆன நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் திணைக்களத்தின் பிரதான செயற்பாடு ஒன்றான இந்த விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 2,636,193 ஆன அதாவது 33 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | 05/1508 செலவின விடயத்தின் கீழ் நிதியேற்பாடாக ரூபா 8,000,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் செலவீனமாக ரூபா 5,363,807 ஆன தொகை ஏற்கப்பட்டிருந்ததுடன் 2022 ஏப்ரல் 26 திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை பிரகாரம் நிகழ்வுகளை நிறுத்துதல் மற்றும் ஏனைய செலவீனங்களை மட்டுப்படுத்தல் காரணத்தினால் இந்த சேமிப்பு ஏற்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு உட்பட்டு திணைக்களத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செய்யப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கட்டுப்பாட்டிற்குரிய நி.பி 135 அதிகார பகிர்வு, இடமாற்றல்கள் மற்றும் உள்ளக கணக்காய்வு தொடர்பான தகவல்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு எழுத்துமூலமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் அதற்கு மேலதிகமாக விசேட நிதிக் கட்டுப்பாட்டு முறைமையில் மாற்றமொன்று மேற்கொள்ளாமையினால் மேற்படி தகவல்களுக்கு மேலதிகமாக வேறு விடயங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.<br><br>எவ்வாறாயினும், தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் எதிர்காலத்தில் குறித்த மீளாய்வு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | 30/2016 ஆம் இலக்க 2016 திசெம்பர் 29 திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தி | எரிபொருள் பயன்பாட்டில் பாதகமான மாற்றமொன்று காணப்படுமெனில் அதை அடையாளப்படுத்திக் கொள்வதற்காக சுற்றறிக்கையில் 01 ஆம் பிண்ணினைப்பில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் போக்குவரத்து | ஓட்டச் சேவை குறிப்பு மாதாந்தம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயம் போக்குவரத்து சேவைகள் குறிப்பிலும் உள்ளடக்கப்பட்டுள்ள-மையினால் தனியாக போக்குவரத்து சேவைகள் குறிப்பு சமர்ப்பிக்கப்படாததுடன் எதிர்காலத்தில் தனியாக போக்குவரத்து | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சேவைக் குறிப்பு மாதாந்தம் நிரப்பப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க-வில்லை. | சேவைகள் குறிப்பும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ii) | பீ/எப்/நிதி/04/152 ஆம் இலக்க மற்றும் 2015 யூலை 14 திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் PFD/ZNFR/TRPT/CC/02 ஆம் இலக்க மற்றும் 2017 பெப்ரவரி 15 ஆந் திகதிய அரச நிதி மேலதிக பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | அரச நிறுவனங்கள் தமது நிறுவன தேவைப்பாட்டின் பிரகாரம் காப்புறுதியினை ஏற்படுத்திக் கொள்ளலானது கொடுக்கல் வாங்கல்களின் வெளிப்படைத்தன்-மை, இடர் முகாமைத்துவத்துவம் போன்று கிரய வினைத்திறன் உறுதி செய்யப்படும் வகையில் இலங்கை காப்புறுதி சபையில் பதிவு செய்யப்பட்ட சந்தையினுள் செயற்படும் காப்புறுதி சேவையினை வழங்கும் நிறுவனமொன்றிட-மிருந்து விலைகள் கோரப்படுவதன் ஊடாக போட்டியாக மேற்கொள்ளப்பட்ட வேண்டிய போதிலும் விலைகள் கோரப்படாது வாகனங்கள் காப்புறுதி நடவடிக்கைகள் தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டி-ருந்தமை அவதானிக்கப்பட்டது. | விலைகள் கோரப்படும் சந்தர்ப்பத்தில் வாகனத்தின் மதிப்பீட்டு பெறுமதி பெற்றுக் கொள்ள வேண்டியமையினால் அதற்காகவும் தொகை செலவிடப்படும். மேலும் விபத்தொன்று நேராமையின் காரணத்தினால் ஆண்டு இறுதியில் உரித்தாகும் உரிமைக்கோரல் தொகையும் ஆண்டுக்கு ஆண்டு குறைவதுடன் அது அரசிற்கு இலாபமாவதுடன் இந்த தொகை இழக்கப்படுவது அரசிற்கு நட்டமாகின்றது. எவ்வாறெனினும் மேற்படி சுற்றறிக்கை பிரகாரம் அடுத்த ஆண்டு தொடக்கம் விலைகள் கோரப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்துக் கொள்கின்றேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டின் செலவினங்களை ஏற்பதற்கான அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த 2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 செப்தெம்பர் 02 திகதிய 2022 இன் 21 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் (திருத்த) சட்டமூலம் சட்டமாக்கப்பட்ட பின்னர் அதற்கு அமைவாக திருத்தப்பட்ட செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்காக தோராயமான திருத்தப்பட்ட திட்டமொன்று நிறுவன ரீதியில் பேணிச் செல்லப்பட்டிருந்த போதிலும் அது முறையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2023 ஆம் ஆண்டிற்காக திருத்தப்பட்ட திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. | திருத்தப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரகாரம் திருத்தப்பட்ட செய்ல நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

### 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 செப்தெம்பர் 13 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2017 திசெம்பர் 11 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய மடுமாதா ஆலயத்தின் யாத்திரை இல்லத்தின் முதலாம் கட்டத்தின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் 2017 திசெம்பர் 23 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 2.5 மில்லியன் செலவினமொன்று ஏற்கப்பட்டிருந்தது. முதலாம் கட்டமாக அடிவாரம் மற்றும் தூண்கள் மட்டும் நிர்மாணிக்கப்பட்டு 05 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் கட்டிடத்தின் எஞ்சிய நிர்மாணிப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அக் காரணத்தினால் இதுவரையில் ஏற்கப்பட்டிருந்த | இந்த நிர்மாணிப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்வதற்காக மன்னார் மாவட்ட செயலாளர் அலுவலகத்திடமிருந்து பல தடவைகள் மதீப்பீடுகள் பெற்றுக் கொள்வதற்காக கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் சிறந்த பதில் கிடைக்கவில்லை. 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் போது இந்த நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்வதற்காக திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்தமையால் இந்த அபிவிருத்தி பணிகள் ஸ்தம்பித்த நிலையில் காணப்பட்டது.<br><br>2145/55 ஆம் இலக்க 2019/10/19 திகதிய அதி விசேட வர்த்தமானி பத்திரிக்கை ஊடாக மடுமாதா ஆலயம் புனித பூமியாக பிரகடனப்படுத்தப்பட்டமையினால் அவ் ஆலயத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தன்னிச்சையாக மேற்கொள்ளப்பட முடியாது எனவும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனில் செயற்பாட்டு குழுவின் மேற்பார்வையின் கீழ் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் 2021 பெப்ரவரி 24 திகதிய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சில் | கட்டிடத்தின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் விரைவில் நிறைவு செய்து பயன்பாட்டிற்கு எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 2.5 மில்லியன் தொகை விளைவற்ற செலவீனம் என அவதானிக்கப்பட்டது. | நடத்தப்பட்ட கலந்துரையாடலின் போது குறிப்பிடப்பட்டது. கொரோனா தொற்றின் காரணத்தினால் குறித்த கூட்டங்கள் நடாத்துவதற்கு முடியாத நிலையொன்று ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் செயற்பாட்டுக் குழு கூட்டம் நடைப்பெறாவிடினும் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்துடன் சேர்ந்து 2024 ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டின் ஊடாக பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிப்பதற்கு விரும்புகின்றேன். | |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு சொந்தமான தலவில சுற்றுலா வீடுதி கற்பிட்டி பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சொந்தமான காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அக் காணியின் உரித்து தீர்த்துக் கொள்வதற்கு இந்த அறிக்கையின் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த திணைக்களத்திற்கு சொந்தமான தலவில யாத்தரிரை இல்லம் 2006 யூன் 28 ஆந் திகதி கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சின் பயன்பாட்டிற்காக கையளிக்கப்பட்டுள்ளதுடன் மீண்டும் விவசாய அமைச்சிற்கு கையளிக்குமாறு அவ்வப்போது கோரப்பட்டன. அவ்வாறெனிலும் இதை மேம்படுத்தி பேணிச் செல்லும் பணியானது இந்த திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதனால் அக் காணி மீண்டும் கையளிக்குமாறு கற்பிட்டி பிரதேச செயலாளரினால் அவ்வப்போது கோரப்பட்ட போதிலும் காணி பணிப்பாளர் நாயகம் திணைக்களத்துடன் கலந்துரையாடி தீர்மாணமொன்று பெற்றுக் கொள்ளுமாறு கற்பிட்டி பிரதேச செயலாளரினால் குறிப்பிட்டு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு தேவையான ஆலோசனை மற்றும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்குமாறு புத்தசாசன மத மற்றும் கலாச்சார விவகார அமைச்சின் செயலாளருக்கு குறிக்கப்பட்டு அனுப்பட்டுள்ளது. | காணியின் உரித்து தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தில் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களில் கணக்காளரைத் தவிர ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் நிதி பிரமாணம் 891 (1) பிரகாரம் பிணைகள் பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களை அடையாளங் கண்டு பிணை வைக்கப்படுவதற்கு மற்றும் நிதி பிரமாணம் பிரகாரம் பிணைகள் பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென தெரிவித்துக் கொள்கின்றேன். | பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களிடம் பிணைகள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.5 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 செப்தெம்பர் 12 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்ட NB 2558 ஆம் இலக்க வாகனத்திற்கு நேர்ந்த ரூபா 137,707 ஆன நட்டம் இதுவரையில் அறவிடப்பட்டிராததுடன் பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விபத்திற்கு உரியதாக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் ரூபா 137,707 ஆன தொகை செலுத்துமாறு விபத்திற்குரிய மற்றைய தரப்பிற்கு தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் அத் தொகை செலுத்துவதற்கு தவறியமையினால் சட்டமா அதிபரினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | நட்டம் அறவிடப்படுவதற்கு அல்லது பதிவழிக்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட மொத்த பதவி எண்ணிக்கை 61 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உதவி பணிப்பாளர் பதவி, அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியொன்று, 3 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் பதவிகள் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் பதவி என 6 | உதவி பணிப்பாளர், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மற்றும் அலுவலக உதவியாளர் பதவிகள் தொடர்பாக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் PACIS மென்பொருள் ஊடாக நாளதுவரையாக்கப்படுவதுடன் காலாண்டு அறிக்கையாக முகாமைத்துவ சேவைகள் | வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. | திணைக்களத்திற்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியானது இடமாற்றம் பெற்று சென்ற உத்தியோகத்தருக்கு பதிலாக மாற்று உத்தியோகத்தரொருவர் வருகை தராமையின் காரணத்தினால் வெற்றிடமாகவுள்ளது. | |
| (ஆ) 2001 ஆகஸ்ட் 22 திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை பிகாரம் 5 ஆண்டுகள் ஒரே சேவை நிலையத்தில் பணி புரிந்துள்ள உத்தியோகத்தரொருவருக்கு வேறு சேவை நிலையங்களில் சேவை புரிவதற்கு இடமளிப்பதற்காக இடமாற்றம் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 இல் 5 தொடக்கம் 17 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பூர்த்தி செய்திருந்த 27 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இடமாற்ற சுற்றறிக்கை பிரகாரம் 5 ஆண்டுகளுக்கு மேல் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விபரங்கள் மற்றும் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்த உத்தியோகத்தர்களின் விபரங்கள் பரிந்துரை செய்யப்பட்டு ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வருடாந்தம் குறித்த திகதிக்கு முன்னர் பெற்றுக் கொடுப்பதுடன் அவ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் அளிப்பது ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பொறுப்பு மற்றும் பணி ஆகும். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |